O/o the Commissioner of Municipal Administration,
Chennai – 28.

**Endt.No.3545/2019/H3** **Date: 01.03.2021**

Copy communicated to take necessary action.

**Encl:** G.O No.88 MA&WS Department, date:24.02.2021.

Sd/- K.Saravanan
For Commissioner of Municipal Administration

To:
All Corporation Commissioners.
All Municipal Commissioners.

//Forwarded by Order//

Superintendent

**சுருக்கம்**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை – பணியாளரமைப்பு – நகராட்சி மருத்துவப் பணி–தமிழ்நாடு மாநகராட்சி பொது சுகாதாரப் பணி – தமிழ்நாடு அரசு மருத்துவ அலுவலர்களுக்கு இணையாக, தமிழ்நாடு நகராட்சி மற்றும் மாநகராட்சி மருத்துவ அலுவலர்களுக்கு (அலோபதி) பதவி உயர்வுடன் கூடிய ஊதிய உயர்வு (Time bound promotion with pay hike) வழங்கி ஆணை வெளியிடப்பட்டது – தெளிவுபடுத்தி திருத்தம் வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை**

**அரசாணை (ப) எண். 88** **நாள்: 24.02.2021**
**சார்வரி வருடம்,**
**மாசி திங்கள், 12 ஆம் நாள்,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2052**

**படிக்கப்பட்டவை:-**

1. அரசாணை (ப) எண். 583, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை, நாள் 16.11.2010.
2. அரசாணை (நிலை) எண். 245, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் (A.2) துறை, நாள் 30.10.2013.
3. அரசாணை (நிலை) எண். 299, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் (EAPII-1) துறை, நாள் 16.12.2016.
4. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித எண்.121/2011/H3, நாள்.08.06.2017.
5. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித எண்.3545/2019/H3, நாள்.11.02.2020 மற்றும் 29.05.2020.
6. அரசுக் கடிதம் எண்.12438/ந.ப.3/2017–2, நாள்.14.03.2018, 03.01.2019 மற்றும் 02.03.2020.

-------

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு அரசு மருத்துவத் துறையின் கீழ் பணியாற்றும் மருத்துவர்களுக்கு (அலோபதி) பதவி உயர்வுடன் கூடிய ஊதிய உயர்வு (Time bound promotion with pay hike) வழங்கி அரசாணை (நிலை) எண். 354, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் (B.2) துறை, நாள் 23.11.2009–இல் வெளியிடப்பட்ட ஆணையினை, தமிழ்நாடு நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கும் (அலோபதி) நீட்டித்து கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆணை வெளியிடப்பட்டது:–

[த.பி.பா..]

| S. No | Level | Pay Scale | Years of Service |
|---|---|---|---|
| 1 | Medical Officer, Grade- II | PB3 - 15600-39100+ GP-5400 | -- |
| 2 | Medical Officer, Grade- I | PB3 - 15600-39100+ GP-5700 | 8 |
| 3 | Senior Medical Officer, Grade- II | PB3 - 15600-39100+ GP-6600 | 15 |
| 4 | Senior Medical Officer, Grade- I | PB3 - 15600-39100+ GP-7600 | Years not specified |
| 5 | Chief Medical Officer | PB4 - 37400-67000+ GP-8700 | 20 |

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையின் கீழ் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு 8, 15, 17, 20 ஆண்டுகள் பணி முடித்தமைக்கு உண்டான பதவி உயர்வுக்கான வரையறை ஆண்டுகளை நிர்ணயம் செய்து தெளிவுப்படுத்திய ஆணை சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையால் வெளியிடப்பட்டது.

3. மேலே நான்கு மற்றும் ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையால் வெளியிடப்பட்ட மேற்காணும் அரசாணையினைப் போன்று, தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு (அலோபதி), மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், Senior Medical Officer Grade- I (அலோபதி) நிலையின் கீழ் ஊதிய விகிதம் PB-15600-39100+GP-7600-க்குண்டான வரையறை ஆண்டின் அளவை 17 ஆண்டுகள் என நிர்ணயம் செய்து திருத்திய ஆணையினை வெளியிடுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

4. நகராட்சி நிர்வாக ஆணையரின் மேற்காணும் கருத்துருவினை, அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின்னர், நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவினை ஏற்று, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பத்தி எண்.5–இல் வரிசை எண்.4–இற்கு, கீழ்க்கண்டவாறு தெளிவுபடுத்தி திருத்தம் வெளியிடப்படுகிறது. மேலும், இந்த ஆணை, அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து (Prospective effect) நடைமுறைக்கு வருகிறது:-

| S. No. | Level | Pay scale | Years of service |
|---|---|---|---|
| 4. | Senior Medical Officer Grade- I (Allopathy) | PB-15600-39100+GP 7600 | 17 |

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.5539/நிதி (ஊ.பி–3)/2021, நாள் 23.02.2021–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஹர்மந்தர் சிங்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்**
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 600 028.

[த.பி.பா..]

இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை,
சென்னை– 600 006.
அனைத்து நகராட்சி ஆணையர்கள்/ மாநகராட்சி ஆணையர்கள்
(நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)

**நகல்**

நிதி (ஊ.பி/ந.நி(ம)கு.வ)த்துறை, சென்னை – 600 009.
சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை – 600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.மு.2/மா.ந.3) துறை, சென்னை– 600 009.
இருப்பு கோப்பு / உபரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்.